நில நிர்வாக ஆணையர் அலுவலகம்
07 MAR 2011
சென்னை-600 005

<u>சுருக்கம்</u>

நில உரிமை மாற்றம் – திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management) மற்றும் குப்பை மக்கு முற்றம் (Compost Yard) அமைத்தல் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிலங்களை நிலக்கிரயமின்றி வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வருவாய் [நிமு5(1)] துறை</u>

<u>அரசாணை (நிலை) எண். 114</u> <u>நாள்: 28.2.2011</u>

<u>படிக்கவும்:</u>

முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையரின் கடித எண். B3/22956/2010, நாள் 13.9.2010.

**********

<u>ஆணை:</u>

முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதாய நோக்கமற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் ஆகியவற்றிற்கு நிலங்கள் அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது எனவும், நகரப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மையினை மேற்கொள்வது மிகப் பெரிய சவாலாக உள்ளது எனவும், உள்ளாட்சி அமைப்புகள் நகரப் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகளை செயல்படுத்துவது போல் திடக்கழிவு தொடர்பான கட்டமைப்புகளை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு சுத்தமான சுகாதாரமான சூழ்நிலையை ஒரு குறிப்பிட்ட காலகெடுவிற்குள் உருவாக்க வேண்டும் என நகராட்சி அமைப்புகளுக்கு உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது எனவும், எனவே, ஆதார நோக்கமின்றி பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு திடக்கழிவு மேலாண்மை மற்றும் குப்பை மக்கு முற்றம் அமைக்கும் திட்டங்களை செயல்படுத்துவது உள்ளாட்சி அமைப்புகளின் அத்தியாவசிய பணியாகும் எனவும் தெரிவித்துள்ளார். இதன் பொருட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு இலவசமாக நிலம் வழங்க வருவாய் நிலை ஆணை 24–இல் "பொதுவான கொள்கைகள்" வரையறுக்கப்பட்டுள்ளதாகவும், எனவே பொது நலன் கருதி திடக்கழிவு மேலாண்மை மற்றும் குப்பை மக்கு முற்றம் அமைத்தல் தொடர்பான திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிலங்களை நிலக்கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்ய முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. மேற்கண்ட சூழ்நிலையில், முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையரின் பரிந்துரையினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று, திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management) மற்றும் குப்பை மக்கு முற்றம் (Compost Yard) அமைத்தல் போன்ற பொதுமக்களின் நலன்கருதி நிறைவேற்றப்படும் திட்டங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிலங்களை நிலக்கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யலாம் என அரசு ஆணையிடுகிறது.

த.பி.பா.

3. மேலே பத்தி 2–இல் உள்ள ஆணைக்கேற்ப தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.கு.ஜெயக்கொடி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள்.
நகல்
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை–5.
ஊரக வளர்ச்சி ஆணையர், சென்னை–5.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டுவசதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–2.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–2.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், வருவாய்த்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்